


ஜீலை 31

# புனித லொயோலா இஞ்ஞாசியார்

(1491-1556)

இவர் அரச அரண்மனையில் வளர்ந்தார். பின் இராணுவத்தில் சேர்ந்தார். இவரது திறமையை எல்லோரும் புகழ்ந்து பேசினார்கள். ஒருமுறை போரில் கடும் காயப்பட்டார். மருத்துவமனையில் கிடக்கையில் நேரப்போக்கிற்காக படிக்கும்படி வீரர்களின் வரலாறுகளை கேட்டார். அவை கிடைக்கவில்லை. புனிதர்களின் வரலாறுகளே கிடைத்தன. அவற்றைப் படித்தபின் உலக மகிமை நிலையற்றது என்று கண்டு தம்மை கடவுளுக்கு அர்ப்பணிக்க உறுதி செய்தார். பொது பாவசங்கீர்த்தனம் செய்தபின் மனரேசா என்னும் இடத்தில் பத்து மாதங்களாக தனிமையில் வாழ்நது செபமும் தவமும் செய்தார். அங்கேதான் “ஞான முயற்சிகள்” என்னும் அரிய நூலை எழுதினார். உரோமை, பாலஸ்தீனா இந்த இடங்களுக்குப் போய்த் திரும்பியபின் கல்வி கற்கத் தொடங்கினார். பாரீஸ் நகரில் கல்வி கற்கும் போது இவரது புண்ணி வாழ்வையும் ஞானத்தையும் கண்ட சிலர் இவருடன் சேர்ந்தார்கள். இவ்விதம் இயேசு சபை ஆரம்பமாயிற்று. பாப்பானவரிடம் தங்கைக் கையளித்து, அவர் சொற்படி கடவுளுக்கு சேவை செய்ய இவர்கள உறுதி செய்தனர். வெனிஸ் நகரில் இவரும் இவருடைய தோழர்களும் குருப்பட்டம் பெற்றார்கள். இயேசு சபை விரைவில் பரவியது. இஞ்ஞாசியார் உரோமையில் தங்கி சபையை ஸ்திரப்படுத்தி வந்தார். தமது சபையைச் சேர்ந்தவர்கள் தரித்திரம். விரத்துத்துவம், கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாடுகளோடு பாப்பானவருக்குக் கீழ்ப்படிவேன் என்று உறுதிகூற வேண்டும். இயேசு சபையின் விருது வாக்கியம் கடவுளின் “அதிமிக மகிமைக்காக” என்பதே. மனிதனது வாழ்வின் நோக்கம் கடவுளை மகிமைப்படுத்துவதே. கடவுளுக்குப் பிரியமானதையே இஞ்ஞாசியார் எப்பொழுதும் செய்து வந்தார்.

**சிந்தனை:**

காரியங்கள் எவ்வளவு நம்பிக்கையற்றவையாகத் தோன்றுமோ அவ்வளவு அதிகமாக கடவுள் மீதும் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். மனித உதவி நம்மைக் கைவிடும் போது கடவுளது உதவி நமக்கு அண்மையில் இருக்கிறது. (புனித லொயோலா இஞ்ஞாசியார்)

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் அனைத்தையும் உமது மகிமைக்காகவும், பாவிகள் ஈடேற்றுவதற்காகவும் செய்யும் வரம் தாரும்.